தீர்மானம் பேரவை முன் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இச் சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஈ) நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்த சட்ட முன்வடிவு, 1982.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: தலைவர் அவர்களே தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இச்சட்டமுன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—தொடர்ச்சி.

*மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் பேச வாய்ப்புத் தந்து, போதுமான நேரமில்லாத காரணத்தால் இன்று தொடர்வதற்கு அனுமதி தந்த உங்களுக்கும், அதை ஏற்றுக் கொண்ட மாமன்ற உறுப்பினர்களுக்கும் முதலில் நான் நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு என்னென்ன செய்துள்ளோம் என்பதை ஆளுநர் உரையிலே விரிவாக எடுத்துக் கூற முடியாவிட்டாலும், இங்கே கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு பதில் சொல்லுகின்ற முறையில் அதற்கு விளக்கம் தருவதற்கு எனக்கு வாய்ப்பிருக்கின்ற காரணத்தால், அதை நான் பயன்படுத்திக் கொள்வதில் தவறில்லை. என்று கருதுகிறேன். நாங்கள் தேர்தலில் மக்களைச் சந்தித்தபோது சில கோட்பாடுகளை அடிப்படையாக வைத்து, எதை எதை நாங்கள்